

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஜுலை 12, 2018 | புரட்சி 17 | முழக்கம் 26 | விலை: ரூ.3.00

# ‘சி.பி.எஸ்.இ.’ – ‘மனுநீதித்’ திமிருக்கு மதுரை உயர்நீதிமன்றம் சம்மட்டி அடி

***நீட் தேர்வை நத்திய ‘மனுநீதி’ பார்ப்பன ஆணையமான மத்திய இடைநிலை கல்வி வாரியத்துக்கு (சிபிஎஸ்இ) மதுரை உயர்நீதி மன்றம் சம்மட்டி அடி கொடுத்திருக்கிறது.***

தமிழில் நீட் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு தவறாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு கருணை மதிப்பெண்ணாக 196 மதிப்பெண்கள் வழங்க சிபிஎஸ்இக்கு உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டுள்ளது. மேலும் கருணை மதிப்பெண்கள் சேர்க்கப் பட்டு புதிய தரவரிசைப் பட்டியலை வெளியிடவும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழில் நீட் தேர்வு எழுதிய மாணவ, மாணவிகளுக்கு, தவறான மொழி பெயர்ப்புக்காக கருணை மதிப்பெண் வழங்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கட்சியை சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரங்கராஜன் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் பொதுநலன் மனு தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், “நாடு முழுவதும் கடந்த மே 6-ம் தேதி நடைபெற்ற நீட் தேர்வில் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடங்களில் இருந்து 180 கேள்விகள் கேட்கப்பட்டன. ஒவ்வொரு கேள்விக்கும் நான்கு பதில்கள் அளிக்கப்பட்டு, அதில் சரியான பதிலைத் தேர்வு செய்ய வேண்டும்.

இந்த நீட் தேர்வில் தமிழ் வினாத்தாளில் 49 வினாக்கள் தவறாக கேட்கப்பட்டிருந்தன. ஆங்கிலத்தில் இருந்து தமிழில் கேள்விகள் தவறாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதனால் தமிழில் நீட் தேர்வு எழுதிய மாணவ, மாணவிகளுக்கு 49 வினாக்களுக்கும் தலா 4 மதிப்பெண் வீதம் 196 மதிப்பெண் வழங்கவும், பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கை நடத்த உத்தரவிட வேண்டும்” என்றும் மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பாக ஏற்கெனவே சிபிஎஸ்இ சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில், “நாடு முழுவதும் தேசிய தமிழ் வினாத்தாளில் தவறு இருப்பதாக மனுதாரர் கூறுவது சரியல்ல. தேர்வு நடத்துவது, தேர்வு முடிவெடுப்பது மட்டுமே சிபிஎஸ்இ வேலை. வினாத்தாள் ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழி மாற்றம் செய்யும்போது தமிழ் வார்த்தைகள் சரியானதா என்பதை சிபிஎஸ்இயால் உறுதி செய்ய முடியாது.

தமிழில் இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடத்தை கற்பிக்கும் அனுபவமிக்க ஆசிரியர்களை வைத்தே ஆங்கில வினாத்தாள் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திலும் அம்மாநில மொழிகளில் மொழி மாற்றம் செய்வதற்கு இந்த நடைமுறை பின்பற்றப் பட்டது. மாநில மொழியில் உள்ள அகராதியை அடிப்படையாக வைத்தே மொழி பெயர்ப்புப் பணிகளை ஆசிரியர்கள் மேற்கொண்டனர்” எனக் கூறப்பட்டிருந்தது.

அப்போது நீதிபதிகள், “தமிழக மாணவர்கள் பால் பாக்கெட், பேப்பர்ப் போட்டு படிக்கின்றனர். இதுபோன்ற தவறு காரணமாக அவர்களின் மருத்துவக் கனவு பாழாகிறது. வருங்கால சமுதாயத்தை நல்ல முறையில் கொண்டு செல்வது நமது கடமை. பீகார் மாநிலத்தில் தேர்வு எழுதியவர்களை விட தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக மனுதாரர் வழக்கறிஞர் குற்றம்சாட்டி யுள்ளார். இதற்கு சிபிஎஸ்இ என்ன பதில் சொல்லப்போகிறது?

தமிழில் மொழி பெயர்ப்பில் அதிக பிழைகள் உள்ளன. இந்த வினாத்தாள் எப்படி ஏற்கப்பட்டது? மேலும் இந்த வழக்கு தாக்கல் செய்த மறுநாளே தேர்வு முடிவு வெளியிட்டது ஏன்? இது தவறான முன்னுதாரணமாகும். நீட் தேர்வில் சிபிஎஸ்இ யாருடைய கருத்தையும் கேட்காமல் தன்னிச்சையாக முடிவு எடுக்கிறது” என அதிருப்தியை வெளிப் படுத்தினர். பின்னர், வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

இந்நிலையில், ஜுலை 10, 2018 அன்று இந்த வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் சி.டி.செல்வம், ஏ.எம்.பஷீர் அகமது ஆகியோர் அடங்கிய அமர்வு வழங்கியது. அப்போது, நீதிபதிகள், “ஆங்கிலத்தி லிருந்து தமிழில் கேள்விகள் மொழிமாற்றம் செய்யப்பட்டபோது பல்வேறு தவறுகள் நிகழ்ந்துள்ளன. இது உறுதி செய்யப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பு தவறாக இருந்த 49 கேள்விகளுக்கும் தலா 4 மதிப்பெண்கள் வீதம் 196 கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும். மதிப்பெண்கள் 2 வாரத்திற்குள் வழங்கப்பட்டு புதிய தரவரிசை பட்டியல் வெளியிடப்பட வேண்டும்” என சிபிஎஸ்இக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

**நீட் உருவாக்கும் அநீதிகள்தான் என்ன?**

சென்ற ஆண்டு அனிதா என்றால் இந்த ஆண்டு பிரதீபா.தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியாவின் பல பகுதிகளிலும் நீட் தேர்வு முடிவுகளை யொட்டி, தற்கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. நீட் தேர்வு என்பது உண்மையில் தகுதியை உறுதிசெய்கிறதா, தாழ்வு மனப்பான்மையையும் ஏற்றத்தாழ்வையும் அதிகரிக்கிறதா?

இந்த ஆண்டு, நாடு முழுவதும் 12,69,922 மாணவர்கள் நீட் தேர்வெழுதினார்கள். 7,14,562 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். தமிழகத்தில் தேர்வெழுதிய 1,14,602 பேரில் 45,336 பேர் தேர்ச்சி பெற்றவர்கள். அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்த 1,337 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். தமிழ் வழியில் தேர்வு எழுதிய 24,720 பேரில் தேர்ச்சி பெற்றவர்கள் 460 பேர்.

நீட் தேர்வைப் பொறுத்தவரை தேர்ச்சி பெற்ற எல்லோருக்கும் இடம் கிடைக்கப் போவதில்லை என்பது அதிர்ச்சியளிக்கும் உண்மை. தமிழகத்தில் உள்ள 22 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 2,900 எம்பிபிஎஸ் இடங்கள் உள்ளன. இவற்றில் 455 இடங்கள் மத்தியத் தொகுப்புக்குத் தரப்பட்டுவிடும். மீதமிருக்கும் 2445 இடங்களும் தமிழக மாணவர்களுக்காகும்.

இங்குள்ள 10 தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 1300 எம்பிபிஎஸ் இடங்கள் உள்ளன. இவற்றில் 783 இடங்கள் அரசு ஒதுக்கீட்டுக்கு வழங்கப்படும். மீதமிருக்கும் 517 இடங்களை நிர்வாகம் நிரப்பிக்கொள்ளும். அரசு பல் மருத்துவக் கல்லூரியில் உள்ள 100 இடங்களில் 85 இடங்கள் தமிழக மாணவர்களுக்கு; 15 இடங்கள் மத்தியத் தொகுப்புக்கு. இவைதவிர, 8 நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் உள்ளன. சித்தா, யுனானி உள்ளிட்ட ஆயுஷ் படிப்புகளும் நீட் தேர்வின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. எல்லாம் சேர்த்து தமிழகத்தில் உள்ள இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான இடங்கள் 9,451. ஆனால், இங்கு, நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பவர்களின் எண்ணிக்கை 45,336. இவர்களில் சிலர் அகில இந்திய ஒதுக்கீட்டில் இடம்பெறமுடியும். அதிக மதிப்பெண் பெற்ற சிலர், வெளிமாநிலங்களில் உள்ள புகழ்பெற்ற கல்லூரிகளைத் தேர்வு செய்யலாம். எல்லாம் கழித்தாலும் சுமார் 30 ஆயிரம் பேரின் நிலை என்ன, எதிர்காலம் என்னவாகும்? - விடை தெரியாத கேள்விகள் இவை.

தேர்ச்சி பெற்றுள்ள 45,336 பேரில் சரிபாதிப் பேர், ஓராண்டோ, இரு ஆண்டுகளோ நீட் தேர்வுக்காகத் தனிப்பயிற்சி பெற்றவர்கள் என்கின்றன ஆய்வுகள். தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 70-க்கும் மேற்பட்ட நீட் பயிற்சி மையங்கள் முளைத்திருக் கின்றன. ஆண்டுக்கு 70 ஆயிரம் முதல் 4 லட்சம் வரை பயிற்சிக் கட்டணம் பெறப்படுகிறது. நீட் தேர்வுக்கான பயிற்சி என்பது வளம் கொழிக்கும் தொழிலாக மாறியிருக்கிறது.

2017-ல் நீட் தேர்வில் தமிழக மாணவர்கள் 400 பேர் மட்டுமே 400-க்கும் மேல் மதிப்பெண் பெற்றார்கள். இந்த ஆண்டு 800 பேர் பெற்றுள்ளார்கள். அதேநேரம், கேரளாவில் 6,000 பேர் இந்த ஆண்டு 400 மதிப்பெண் களுக்கு மேல் பெற்றுள்ளனர். இப்படி அதிக மதிப்பெண்கள் பெற்ற அண்டை மாநிலத்தவர்கள் தான் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அகில இந்திய மருத்துவ இடங்களை நிரப்புகிறவர்கள்.

இந்தியாவிலேயே, தமிழகத்தில் தான் அதிக மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. காமராஜர் தொடங்கி கலைஞர், ஜெயலலிதா வரை தமிழகத்தை ஆட்சிசெய்த அத்தனை தலைவர்களும், நம் மாணவர்களுக்காக திட்டமிட்டு மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கினார்கள். அரசு மருத்துவக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் பெரும்பாலும் அரசு சுகாதாரத்துறைக்குள்ளாகவே இருந்தார்கள். அதனால் தான், சுகாதாரத்துறையில், இந்தியாவிலேயே சிறந்த நிலையில் இருக்கிறது தமிழகம். 50 சதவிகிதம் தொற்றுநோய்களைத் தமிழகத்தில் இருந்து விரட்டி விட்டோம். 10 கிராமங்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் 1400-க்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார மையங்கள் செயல்படுகின்றன. குழந்தை இறப்பு விகிதம், தாய் இறப்பு விகிதம் குறைந்த மாநிலங்களில் இந்தியாவிலேயே இரண்டாமிடத்தில் இருக்கிறோம். ஆனால் இதையெல்லாம் நீட் நீர்த்துப் போகச் செய்துவிடும் என்கிறார்கள் மருத்துவ செயற்பாட்டாளர்கள்.

“தமிழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில், எம்.டி., எம்.எஸ் போன்ற மருத்துவ முதுநிலைப் படிப்புகளுக்கு 1585 இடங்கள் உள்ளன. எம்பிபிஎஸ் முடித்து, அரசு மருத்துவமனைகளில் சேர்ந்து பணியாற்றும் மருத்துவர்களுக்கு இந்த உயர் படிப்புகளில் 50 சதவிகிதம் ஒதுக்கீடு இருந்தது. கிராமப்புறப் பகுதிகள், மலைக்கிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார மையங்களில் பணியாற்று வோருக்கு சிறப்பு மதிப்பெண்கள் தரப்பட்டு முன்னுரிமையும் வழங்கப்படும். முன்னுரிமையில் சேர்பவர்கள், குறிப்பிட்ட ஆண்டுகள் அரசு மருத்துவமனையில் பணியாற்றியாக வேண்டும் என்று ஒப்பந்தமும் உண்டு. இந்த ஒதுக்கீட்டையும், முன்னுரிமையையும் விரும்பி ஏராளமான இளநிலை மருத்துவர்கள் அரசு மருத்துவமனை களுக்குப் பணிக்கு வந்தார்கள்.

இப்போது இந்த ஒதுக்கீட்டை எடுத்து விட்டார்கள். நீட் தேர்வு மூலம் தான் இந்த இடங்கள் நிரப்பப்படும். இனிமேல், எம்பிபிஎஸ் முடிக்கும் ஒரு மருத்துவர், அரசு மருத்துவமனைக்குப் பணிக்கு வர மாட்டார். ஏதேனும் ஒரு தனியார் மருத்துவமனையில்

(4ஆம் பக்கம்)

## தமிழக மசோதா காலாவதி...?

இந்திய மருத்துவக் கவுன்சிலுக்கு மாற்றாக, தேசிய மருத்துவ ஆணையம் என்ற பெயரில் புதிய அமைப்பை உருவாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது மத்திய அரசு. இந்த ஆணையம் உருவாக்கப்பட்டால், நீட் தேர்வு சட்டபூர்வமாகிவிடும், மருத்துவப் படிப்பை முடித்தவர்கள், அகில இந்திய அளவில் நடக்கும் உரிமத்தேர்வு ஒன்றை எழுதித் தேர்ச்சி பெற்றால் மட்டுமே மருத்துவராகப் பணியாற்ற முடியும். இது நடைமுறைக்கு வரும்வரை, எம்.பி.பி.எஸ். படிப்பின் இறுதியாண்டுத் தேர்வையே அகில இந்திய உரிமத் தேர்வாக நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். நீட் தேர்வில் இருந்து விலக்குகோரி தமிழக சட்டமன்றம் ஒருமனதாக உருவாக்கி அனுப்பிய இரண்டு சட்டமசோதாக்களை ஒரு ஆண்டுக்கும் மேலாக உள்துறை அமைச்சகம் கிடப்பில் போட்டுள்ளது. தேசிய மருத்துவ ஆணைய சட்டம் நிறைவேற்றப்படுமானால் இந்த இரண்டு மசோதாக்களும் காலாவதியாகிவிடும். அதற்காகவே, உள்துறை அமைச்சகம் காலதாமதம் செய்கிறது என்று குற்றம் சாட்டுகிறார்கள் மருத்துவச் செயற்பாட்டாளர்கள்.

**தலையங்கம்**

## ‘டிரம்ப்’பின் பார்ப்பனியம்

அமெரிக்காவில் கறுப்பர்கள், ஆசியர்கள், தென் அமெரிக்காவிலிருந்து குடிபெயர்ந்த ‘ஹிஸ்பெனிக்ஸ்’ எனும் பிரிவினருக்கு தனியார் கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களில் ‘பாகுபாடு’ காட்டாமல், பணி உறுதியாக்கம்


Affirmative action policies rolled back

Trump regime says Obama-era policies advocate preferences beyond scope of the Constitution

ERICA L. GREEN
MATT APUZZO
WASHINGTON

The Trump administration said on Tuesday that it was ...

ments of the Constitution”.
“The executive branch cannot circumvent Congress or the courts by creating guidance that goes beyond the ...

A highly anticipate... is pitting Harvard ... Asian-American stu... who say one of the m...

‘The Hindu’ July 5, 2018

(Affirmative Action) செய்யும் சட்டம் நீண்டகாலமாக அமுலில் இருந்து வருகிறது. இப்போது நிறவெறியுடன் நடக்கும் ‘டிரம்ப்’ ஆட்சி வெள்ளை நிறவெறியர்களின் அழுத்தத்தை ஏற்று, ‘பாகுபாடு ஒழிப்பு’ சட்டத்தைக் கைவிடும் முடிவுக்கு வந்திருக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிர்ச்சி தரும் இந்த அறிவிப்பை டிரம்ப் நிர்வாகம் கடந்த ஜூலை 3ஆம் தேதி அறிவித்துள்ளது. மைனாரிட்டி மக்களுக்கு கல்வி, வேலை வாய்ப்புகளில் ‘உறுதியாக்கும் செயல்பாடு’ என்ற பெயரில் அவர்களுக்கான பிரதிநிதித்துவத்தை வழங்கும் சட்டம் 1967ஆம் ஆண்டு முதல் அங்கே அமுலில் இருந்து வருகிறது.

கருப்பின மக்களுக்கு காலங்காலமாக இழைக்கப்பட்டு வந்த அநீதியை அகற்றுவதற்காக 1967 இல் நியமிக்கப்பட்ட ‘ஜெர்னர் ஆணையம்’ அமெரிக்கா ஒரு தேசமாக உருவெடுக்க வேண்டுமானால் இந்த ‘பாகுபாடுகள்’ ஒழிக்கப்பட்டு, அவர்களுக்கான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. அதனடிப்படையில் ‘சம வேலை வாய்ப்பு ஆணையம்’ ஒன்றும் உருவாக்கப்பட்டது. ஊடகத் துறைகளில் கறுப்பர்களை உயர் பதவிகளில் அமர்த்து வதற்காகவும் வெள்ளையர் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவும் ‘செய்தி பத்திரிகை ஆசிரியர்களுக்கான அமெரிக்க சங்கம்’ ஒன்றும் உருவாக்கப்பட்டது.

ஒபாமா அதிபராக இருந்தபோது இப்பிரச்சினையில் தீவிரமாக கவலை எடுத்து செயல்பட்டார். குறிப்பாக பல்கலைக்கழகங்களில் இன அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதை முழுமையாகத் தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக மாணவர் சேர்க்கைக்கான ஏழு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டன. ஒபாமா நிர்வாகம் உருவாக்கிய ஏழு நெறிமுறைகளையும் பின்பற்றத் தேவையில்லை என்றும் கருப்பர்களுக்காக தனி பிரதிநிதித்துவம் வேண்டாம் என்றும் டிரம்ப் நிர்வாகம் கல்வி நிறுவனங்களுக்கு இப்போது சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

“ஜாதி அடிப்படையில் இடஒதுக்கீடு செய்வது ஜாதியை வளர்ப்பதாகும்” என்று இங்கே பார்ப்பனர்களும் இடஒதுக்கீடு எதிர்ப்பாளர்களும் முன் வைக்கும் அதே குதர்க்கவாதத்தையே டிரம்ப் நிர்வாகமும் ‘இனபேதத்தை வளர்க்க வேண்டாம்’ என்று சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக அமெரிக்க சட்டப் புத்தகத்தில் உள்ள கறுப்பர்களுக்கு உரிமை வழங்கும் பிரிவுகளை புறக்கணித்து விடுமாறு பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிர்வாகங்களுக்கு டிரம்ப் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது என்று நீதித் துறையின் அதிகாரி டெவின் ஓ. மெல்லே (Devin O’ Malley) கூறியுள்ளார்.

ஆனால், கல்வித் துறைச் செயலாளர் பெஸ்டி டீ வோஸ் (Besty De Vos) இதற்கு மாறுபட்ட கருத்தைத் தெரிவித்துள்ளார். “உச்சநீதிமன்றம் ‘உறுதியாக்கும் செயல்பாடு’ (Positive affirmation) என்ற கொள்கையை உறுதியாகப் பின்பற்ற வேண்டும் என்று தீர்ப்பளித் திருக்கிறது. உச்சநீதி மன்றம் வழங்கியுள்ள எழுத்து பூர்வமான தீர்ப்புதான் கல்வி நிறுவனங்களுக்கான வழிகாட்டும் நெறிமுறைகள். இதை சீர்குலைக்கக் கூடாது” என்று கூறி இருக்கிறார்.

உலகத்தின் புகழ் பெற்ற பல்கலைக்கழகமான ‘ஹார்வார்டு’ பல்கலைக்கழகம் அமெரிக்க குடியுரிமை பெற்ற ஆசியர்களை அனுமதிக்காமல் திட்டமிட்டு புறக்கணித்து வருவதை எதிர்த்து அமெரிக்க உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. வழக்கின் தீர்ப்பை எதிர்நோக்கியுள்ள நிலையில் அமெரிக்காவின் கல்வி மற்றும் நீதித் துறையில் உள்ள வெள்ளை நிறவெறி அதிகாரிகள் ‘டிரம்ப்’ நிர்வாகத்துக்கு அழுத்தம் தந்து, இப்படி ஒரு சுற்றறிக்கையை அனுப்ப வைத்துள்ளனர். ‘பார்ப்பனிய இந்துத்துவ’க் கொள்கையை ஆதரிப்பதாகக் கூறிய வெள்ளை நிற வெறி கொண்ட டிரம்ப்பும் இதற்கு உடன்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனநாயகவாதிகளும் சிவில் உரிமை அமைப்புகளும் டிரம்ப் நிர்வாகத்தின் இனவெறிக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். கூட்டாட்சி தத்துவத்தை ஏற்றுக் கொண்ட அமெரிக்காவில் மாநில அரசுகளே இது குறித்து முடிவெடுக்க வேண்டுமே தவிர, ‘டிரம்ப்’ நிர்வாகம் உத்தரவிடக் கூடாது என்பது இவர்களின் வாதம்.

இந்தியாவில் ‘நீட்’ தேர்வை மாநிலங்கள் மீது நடுவண் ஆட்சி திணிப்பது போன்றே அமெரிக்காவிலும் ‘டிரம்ப்’ நிர்வாகம் ‘மைனாரிட்டி’ மக்களுக்கு எதிராக முடிவுகளைத் திணித்துள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியமும் இந்திய பார்ப்பனியமும் ஒரே திசையில்தான் பயணிக்கின்றன. மனுவாதமும் இனவெறியும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் தானே!

# இராமனை விமர்சித்த இயக்குனர் 6 மாதம் அய்தராபாத்தில் நுழைய தடையாம்


இராஜாஜி


‘கத்தி’ மகேஷ்

இயக்குனர் ரஞ்சித் உருவாக்கிய ‘காலா’ திரைப்படம் பம்பாய் ‘சேரிப் பகுதி’ மக்களின் குடியிருப்பையும் நிலங்களையும் பெரும் தொழில் நிறுவனம் அரசியல் அதிகாரத்தோடு கைப்பற்றுவதை எதிர்த்து மக்கள் நடக்கும் போராட்டத்தை ‘இராம-இராவண’ப் போராட்டத்தின் பின்புலத்தில் சித்தரித்தது. பெரும் முதலாளி இராமர் பஜனை செய்வார்; மக்களுக்காகப் போராடும் ‘காலா’, ‘இராவண காவியம்’ பேசுவார். தமிழ் ஊடகங்கள் இப்பிரச்சினையை விவாதத்துக்குக் கொண்டு வராமல் பதுங்கி விட்டாலும் பல தெலுங்கு தொலைக்காட்சிகளில் இது குறித்து விவாதங்கள் நடந்தன.

அண்மைக்காலமாக கடவுள் மதத்தை மறுக்கும் நாத்திகராக தன்னைத் துணிவுடன் வெளிப்படுத்தி வரும் தெலுங்கு ஆவணப்பட இயக்குனர் ‘கத்தி’ மகேஷ், இந்த விவாதங்களில் பங்கேற்று ‘இராம’னுக்கு எதிராகப் பேசினார். சங்பரிவார் அமைப்புகள் காவல் நிலையத்தில் புகார் தந்தன. உடனே அய்தராபாத் காவல்துறை பல்வேறு பிரிவுகளில் அவர் மீது வழக்கு தொடர்ந்தது. கடந்த 2018 ஜூலை 8ஆம் தேதி இரவு அவரை கைது செய்ததோடு 6 மாதங்களுக்கு அய்தராபாத் நகரத்துக்குள் நுழைய கூடாதென தெலுங்கானா காவல்துறை தலைமை இயக்குனர் மகேந்தர் ரெட்டி உத்தரவிட்டிருக்கிறார். உடனே காவல்துறை அவரை வேனில் ஏற்றி அவரது சொந்த ஊரான சித்தூரில் கொண்டுபோய் இறக்கி விட்டுள்ளது.

‘இராமன்’ 14 ஆண்டுகள் காட்டுக்கு கடத்தப்பட்டதைப்போல் இராமனை விமர்சித்ததற்காக ஒரு பகுத்தறிவாளர் 6 மாத காலம் ‘ஊர்’ கடத்தப்பட்டிருக்கிறார். தெலுங்கானாவில் நடக்கும் ‘இராமராஜ்யம்’ இது. ‘இராவணன்’ உருவத்தை புதுடில்லியில் தீ வைத்து எரித்து, ‘இராமலீலா’ கொண்டாட்டம் நடத்துகிறது ‘பார்ப்பன’க் கூட்டம் அதை திராவிடர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுமாம்!

**‘இராமன்’ பற்றி இராஜாஜி கூறியது என்ன?**

சரி; ‘கத்தி’ மகேஷ் பேசினால் குற்றம்; பார்ப்பனத் தலைவர் இராஜாஜியே - ‘இராமன்’ வண்டவாளத்தை தண்டவாளத்தில் ஏற்றியிருக்கிறாரே! அதற்கென்ன பதில்? இதோ இராஜாஜி ‘இராமனை’ தோலுரிக்கிறார்.

“உத்திர ராமசரிதம் என்னும் தலைப்பில், சமஸ்கிருதத்தில் பவபூதி என்பவர் எழுதி, க.சந்தானம் அய்யங்கார் தமிழில் மொழி பெயர்த்து எழுதிய நூலை சென்னை அலையன்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

அந்நூலுக்கு ராஜாஜி முன்னுரை ஒன்று எழுதியுள்ளார். இந்தக் கருத்துக்களைப் படிப்பவர்கள் இராஜாஜியா இப்படி எழுதியுள்ளார்? இருக்காதே! நம்ப முடியாது என்கிறீர்களா? உண்மை தான், இவை இராஜாஜி எழுதியவை. அது இதோ!

“நாரதர் சொல்லி வால்மீகி இயற்றினார்; இதில் ஒரு விதத் தவறும் இருக்கமுடியாது; ஓர் எழுத்து விடாமல் எல்லாம் ஒப்புக் கொண்டே தீர வேண்டும் என்பதாயிருந்தால் எனக்கு ஒன்றும் சொல்ல இடமில்லை. அப்படியில்லை; உனக்குத் தோன்றியதைத் தோன்றியவாறு சொல்லலாம்; குற்றமில்லை என்று பெரியோர் இடம் கொடுத்தால் இராமாயண உத்திர காண்டத்தைப் பற்றிச் சொல்ல விரும்பு கிறேன்.

நானும் எவ்வளவோ முயற்சி செய்து தான் பார்த்தேன் - சிறீ ராமன் உலகத்துக்கு வழிகாட்ட அவதரித்த கடவுள் - சீதையை அரும்பாடுபட்டு இலங்கையிலிருந்து மீட்டுக் கொண்டபின் ஊராரின் வம்புப் பேச்சைக் கேட்டுக் காட்டுக்கு அனுப்பி விட்டான் என்கிற கொடூரக்கதை என் மனசுக்குச் சமாதானப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை. அன்புடனும், பக்தியுடனும் முயற்சி செய்திருக்கிறேன்.

**பெரியோர்கள் என்னை நாஸ்திகன் - சூனா மானாக் காரன் என்று சொல்லக் கூடாது. உண்மையில் இந்தக் கதையைச் சகிக்க என்னால் முடியவில்லை. நாஸ்திகனாக இருந்தால் ஒரு வேளை சகித்திருப்பேன்.**

ராமாயணத்தில் முதல் அத்தியாயத்தில் கதை முழுவதும் சொல்லப்படுகிறது. அதில் இந்த அனர்த்த விஷயம் சொல்லப்படவில்லை. நாடு நகரம் முழுவதும் அறிவு விவேகிகளும் சீலமும் நிறைந்த ஜனங்கள் எல்லோரும் தர்மாத்மாக்கள் வெகு சாஸ்திரங்களை அறிந்தவர்கள் என்றும், அற்ப குணமுள்ளவன் - வித்தை பெறாதவன் - நாஸ்திகன் துஷ்டன் மருந்துக்கும் கூட ஒருவன் அகப்படமாட்டான். என்றெல்லாம் ஓயாமல் பாடப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட ஜனங்கள், சீதை ஊருக்குத் திரும்பி வந்ததும், இவ்வளவு கேவலமாகப் பேசியது எப்படி?

சிறீராமன் அரசாண்டு வந்த அயோத்திய நகரம் நம் கலிகால சென்னப்பட்டணம், திருச்சிராப்பள்ளியை விடக் கேடுகெட்ட நிலைக்கு எவ்வாறு வந்துவிட்டது. இந்தக் கலிகாலத்தில் நம்மைப் போன்ற, தாழ்ந்த மதியும் சீர் கெட்ட பண்பும் கொண்டவர்களும் கூடச் சொல்லத் துணியாத பேச்சை, அயோத்தியா வாசிகள், சிறீராமனுடைய ‘பிரியதேவி’யைப் பற்றிப் பேசினார்கள் என்றால் எவ்வாறு ஒப்புக் கொள்வது?

அப்படி யாராவது பேசினாலும் ராமன் தன் காதில் போட்டுக் கொண்டான், அந்தப் பாமர ஜனங்கள் கூட சீதையைக் காட்டுக்கு அனுப்பச் சொல்லவில்லையே. ஏன் ஒரு விசாரணையுமின்றி அக்கிரமமாக இவ்வாறு ராமன் செய்யத் துணிந்தான்? இதை எவ்விதத்திலும் ஒப்புக் கொள்ள முடியாது. இதனால் தான் நன்னெறிப் பயில்வதற்கு இந்தக் கதை உதவாது என்று நம்முடைய பெரியோர் இந்தக் கட்டத்தைப் பிரயோகத்தினின்றும் தள்ளி விட்டார்கள். ஆழ்வார் களும் இதை எடுத்துப் பாடாமல் நீக்கி விட்டார்கள்.

இம்மாதிரியான ஒரு பெரும் அநீதியை சிறீராமச்சந்தின் தன் தேவிக்குச் செய்ததாக எப்படியோ ஒரு கதை கர்ண பரம்பரையாகச் சொல்லிவிட்டு, அந்தக் காலத்திலும் கூட வால்மீகி முனிவரையும் தடுமாறச் செய்தி ருக்க வேண்டும். புண்ணிய கதையாகிய ராமாயணத்தைப் பாட உட்கார்ந்த போதே இந்தப் பொல்லாத அய்தீகத்தை என்ன செய்வது என்று அவர் யோசித்திருக்க வேண்டும்.

அதற்காகவே முனிவர் யுத்த காண்டத் தின் முடிவில், வேண்டாத ஓர் அக்கினிப் பரிட்சையை அமைத்து, அத்துடன் அந்த ஆபத்தும் ஒழியும் என்று எண்ணினார் போல் தோன்றுகிறது. ஆனாலும் அவர் எண் ணம் முடிவு பெறவில்லை. உத்தரகாண்டம் யாரோ எழுதி ராமாயணத்துடன் சேர்ந்தே போயிற்று, **ஊர் வம்புக்குப் பயந்து ராமன்** சீதையை காட்டுக்கு அனுப்பியது ராவணன் செய்த செயலை விடப் பெரும் பாவச்செயல்.

ராவணன் அபாயங்களைப் பொருட்படுத்தாமல் இந்த கெட்ட காரியத்தில் இறங்கி ஜடாயுவோடு போர் புரிந்து அவனை வென்று சீதையை இலங்கைக்குத் தூக்கிப் போனான். துஷ்டத்தனமானாலும் தைரியம் கலந்த செயல். ராவணன் காமவெறி கொண்டவனானாலும் இலங்கையில் தேவியை பலாத்காரம் செய்ய எண்ணம் கொள்ளவில்லை. அசோக வனத்தில் வைத்து அவள் அன்பைப் பெற முயன்று, பலநாட்கள் தன் வெறியை அடக்கியே வந்தான்; அதற்காக உயிரையும் நீத்தான்.

ஆனால் இந்த உத்தர ராம சரித்திரத்தில் வெறும் ஊர் வம்பைக் கேட்டு ராமன் சீதையை, நீதி உண்மை எதையும் கருதாமல் காட்டுக்கு அனுப்பி விட்டான் என்று சொல் லப்படுகிறது. உண்மையில் இது நடந்திருந் தால் இறந்த ஜடாயு மீண்டும் உயிர் கொண்டு எழுந்து ராமனுக்கு நல்ல புத்தி புகட்டியிருப் பான். மகனே இது தகாது. இது பயங் கொள்ளித்தனம். இது தர்மத்தைக் கொன்ற தாகும் என்று சொல்லி தடுத்திருப்பான்... உத்திர காண்டத்தை விட்டு விட இஷ்டமில் லாமற் போனால், ராமாயண மாலையில் ரத்னங்களாக ஜொலிக்கும் வீர புருஷர் களையும் அவர்கள் பண்புகளையும் வெறுங் கதையன்று தள்ளிவிட வேண்டியதாகும்.

ஆயினும் பவபூதி என்ற பேராசிரியர் பொருத்தமற்ற இந்தக் கதையை அழகிய நாடகமாக சமஸ்கிருதத்தில் இயற்றினான்; அது மிகவும் புகழ் பெற்ற நூல், நண்பர் சந்தானம் என்னுடன் சிறையிலிருந்த காலத்தில் அதைத் தமிழில் எழுதி முடித்தார். மிகவும் சாமர்த்தியமாக வட மொழி நூலின் அழகு குறையாதபடி மொழி பெயர்த்தி ருக்கிறார்.”

இராஜாஜி இருந்திருந்தால் அவரையும் தண்டித்திருப்பார்களா?

# கவுரி லங்கேஷ் படுகொலை எப்படி நடந்தது?

# சங்பரிவார் கும்பல் சதி அம்பலமானது

கர்நாடக இதழியலாளரும் முற்போக்கு சிந்தனையாளரும் இந்துத்துவ எதிர்ப்பாளருமான கவுரி லங்கேஷ் 05.09.2017 அன்று படுகொலை செய்யப்பட்டார். சில சங்பரிவார ஆதரவு இதழ்கள் இது தனிப்பட்ட விரோதம்காரணமாக நடந்த கொலை என்றனர். இன்னும் சிலர் இது நக்சலைட்டுகளின் செயல் என திசைத் திருப்ப முயன்றனர்.தற்பொழுது 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அனைவரும் சங்பரிவார அமைப்பினர். எனினும் இவர்கள் சங்பரிவாரத்தின் முக்கிய அமைப்புகளுடன் கொண்டிருக்கும் தொடர்புகளை மிகவும் திட்டமிட்டு மறைப்பது மட்டுமல்ல; கொலை செய்ய இவர்கள் தீட்டிய திட்டம் எவ்வளவு நுணுக்கமானது என்பதை அறியும் வகையில் சில செய்திகள் வெளியாகியுள்ளன.

கவுரி லங்கேஷ் கொலை வழக்கில் கீழ்கண்ட ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்:

படுகொலையை அரங்கேற்றியவர்கள் : பரசுராம் (சிறீராம் சேனா), வாக்மோர், நவீன் குமார் (இந்து யுவசேனா ஸ்தாபகர்), சுஜித் குமார் (இந்து ஜனசகுர்த்தி சமிதி), அமோல் காலே (சனாதன சன்ஸ்தா), மனோகர் (சிறீராம் சேனா எடாவே), பிரதீப் (சனாதன சன்ஸ்தா)

காவல் துறை சிறப்பு புலனாய்வுக் குழுவுக்கு இந்த வழக்கின் சூட்சுமத்தை உடைப்பது அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை. சங்பரிவாரத்தை சேர்ந்த சுமார் 200 பேரின் பட்டியலை தயார் செய்தனர்.15 கோடி தொலைபேசி உரையாடல்களை கவனித்தனர். எந்த சிறு துப்பும் கிடைக்கவில்லை. கொலையாளிகள் தொலைபேசி அல்லது அலைபேசியை பயன்படுத்தவில்லை எனும் முடிவுக்கு புலனாய்வு குழு வந்தது.இந்த தருணத்தில்தான் நவீன்குமாரின் ஒரு உரையாடலை கேட்க நேர்ந்தது. தான் கவுரியின் கொலைக்கு பிறகு தலைமறைவு ஆகிவிட்டதாக நவீன் குமார் தொலைபேசியில் பேசியது பதிவானது. ஆனால் மறுமுனையில் பேசியது யார் என்பது தெரியவில்லை. எனவே காவல்துறையினர் உடனடியாக நவீனை கைது செய்யவில்லை. மறுமுனையில் எவரிடம் பேசுகிறார் என்பதை கவனித்தனர். மறுமுனையில் பேசுபவர் நாணயம் போட்டு பேசும் தொலைபேசியில் பேசியதால் கண்டுபிடிப்பது சிரமமாக இருந்தது. எனவேதுப்பறியும் குழுவினர் நாணயம் போட்டு பேசும் 126 தொலைபேசிகளை கண்காணித்தனர். அதே சமயத்தில் பேராசிரியர் பகவான் அவர்களை தீர்த்துக்கட்ட நாள் குறிக்கப்பட்டது. அந்த திசையில் நகர்வுகள் வேகமாக நடந்தன. எனவே வேறு வழியின்றி நவீனை கைது செய்ய வேண்டிய அவசியம் காவல்துறைக்கு உருவானது. இதன் மூலம் பகவான் உயிர் காக்கப்பட்டது. நவீன் மூலம் மறுமுனையில் பேசியது சுஜித்குமார் என்பதை குழு கண்டுபிடித்தது. மேலும் ஜனசகுர்த்தி சமிதி எனும் சங்பரிவார ஊழியர் மோகன் கவுடா என்பவரின் திருமணத்திற்கு சுஜித்குமார் வருவதாக இருந்தது. அப்பொழுது சுஜித்தை மடக்க புலனாய்வுக் குழு திட்டமிட்டது. ஆனால் ஒரு காட்சி ஊடகம் முட்டாள்தனமாக நவீன் குமாரின் கைதை வெளிப்படுத்த சுஜித் பதுங்கிவிட்டான். எனினும் வேறு வழியில் சுஜித்குமாரை விரைவில் காவல்துறையினர் கைது செய்தனர்.

சுஜித்குமாரின் ஒரு டைரியை ஆய்வு செய்த பொழுது அதில் பல பெயர்கள் இரகசிய மொழியில் இருந்தன. அந்த இரகசியத்தை உடைத்த குழு அடுத்தபடியாக அமோல் காலேவை கைது செய்தது. அமோலின் டைரி ஒன்றை குழு கைப்பற்றியது. அந்த டைரியில் பல அதிர்ச்சி தரத்தக்க செய்திகள் இருந்தன. இந்தியா முழுதும் இந்துத்துவாவுக்கு எதிராக பேசுபவர்களின் 26 பெயர்கள் பட்டியலில் இருந்தது. இந்து மதத்தைச் சேர்ந்த அவர்கள் அனைவரும் தீர்த்து கட்டப்பட வேண்டியவர்கள். கர்நாடகத்தில் மட்டும் அதில் 10 பேர். அதில் கவுரி லங்கேஷ் மற்றும் பகவான்பெயரும் அடக்கம். மேலும் நிடுமாமுடி மடத்தைச் சேர்ந்த வீரபத்திரா சென்னமல்லா எனும் துறவி, வழக்கறிஞர் துவாரகநாத், கல்புர்கியின் நெருங்கிய நண்பர் பேராசிரியர் சந்திரசேகர் பட்டீல் ஆகியோரின் பெயர்களும் இடம் பெற்றிருந்தன. இவர்கள் அனைவரும் முற்போக்கு கருத்துகளுக்கு குரல் கொடுப்பவர்கள்.அமோலை பேசவைப்பது புலனாய்வுக் குழுவுக்கு அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. பரசுராமை தாங்கள் கைது செய்துவிட்டோம் என ஒரு தகவலை பொய்யாக கூறினர். அப்பொழுது அமோல் கோபத்துடன்



கத்திக்கொண்டு தனது தலையை சுவற்றில் வேகமாக மோதிக்கொண்டான். அந்த செயல் பல உண்மைகளை துப்பறியும் குழுவுக்கு தெரிவித்தது. அதன் பின்னர் மனோகர் எடாவே மற்றும் பிரதீப்பை காவல்துறையினர் கைது செய்தனர்.இறுதியாக பரசுராம் கைது செய்யப்பட்டான். விசாரணை செய்யும் இடத்திற்கு கூட்டி வருவதற்கு முன்பே அனைத்து உண்மைகளையும் பரசுராம் கக்கி விட்டான். ஆனால் கவுரியை சுட்டதற்கோ அல்லது கைது குறித்தோ அவனிடம் எவ்வித குற்ற உணர்வும் இல்லை. 2012 ஆம் ஆண்டு புத்தாண்டு அன்று கர்நாடகாமாநிலம் சிண்டகி எனும் வட்டத்தில் திடீரென பாகிஸ்தான் கொடி ஏற்றப்பட்டது. இந்த பகுதியில் ஏராளமான இசுலாமியர்களும் வாழ்ந்து வந்தனர். ஆனால் எந்த மதமோதலும் இருந்தது இல்லை. இந்துக்களும் இசுலாமியர்களும் ஒற்றுமை யுடன் இருந்தனர். அத்தகைய சூழலில் பாகிஸ்தான் கொடி ஏற்றப்பட்டது பிரச்சனையை ஏற்படுத்தியது. இச்செயலை கண்டித்து இராமசேனா அமைப்பினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். பாகிஸ்தான் கொடியை யார் ஏற்றியது என்பதை விசாரித்த காவல் துறையினர் 6 பேரை கைது செய்தனர். அதில் முக்கியக் குற்றவாளி பரசுராம்தான்! ஆம்! சங்பரிவாரத்தின் துணை அமைப்பான இராமசேனாவினரே பாகிஸ்தான் கொடியைஏற்றிவிட்டு, அதற்கு எதிராக அவர்களே ஆர்ப்பாட்டமும் செய்தனர். இது இந்து-முஸ்லிம் மோதலை உருவாக்க அரங்கேற்றிய சதித்திட்டம் என்பதை கூறத்தேவை இல்லை. அதே பரசுராம் தான் கவுரி லங்கேஷை சுட்டுக் கொன்றான் என குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளான்.

**படுகொலைக்கு துல்லிய வஞ்சகத் திட்டம்**

இந்த கொலையில் கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா ஆகிய மூன்று மாநிலங்களை சேர்ந்த சங்பரிவாரத்தினர் ஈடுபட்டனர். திட்டம் தீட்டியது அமோல் காலே, மனோகர் எடாவே ,பிரதீப் ஆகியோர். அமோல் காலே இந்த பணியை சுஜித்குமாரிடம் ஒப்படைத்தான். சுஜித் குமார் நவீன் குமாரிடம் துப்பாக்கிக் குண்டுகளை ஏற்பாடு செய்யும் பொறுப்பையும் கவுரியை சுடும் பாதக செயலை பரசுராமிடமும் ஒப்படைத்தான். கவுரியை சுட்ட 15 நிமிடங்களில் பரசுராம் அந்த துப்பாக்கியை அமோலிடம் ஒப்படைத்தான். அனைவரும் காற்றில் கரைந்தனர். சுமார் 6 மாதங்கள் கழித்து பேராசிரியர் பகவானை கொலை செய்ய அடுத்த திட்டம் தீட்டுகின்றனர். கவுரி லங்கேஷை சுட்ட துப்பாக்கி மூலம்தான் தபோல்கரும் சுடப்பட்டார் என்பது தற்பொழுது நிரூபணம் ஆகியுள்ளது.இந்த கொலைகள் ஒரு கணத்தில் உண்டான கோபத்தின் காரணமாகவோ அல்லது உணர்ச்சி வசப்பட்டோ நடந்தது அல்ல! மாறாக துல்லியமாக திட்டமிட்டு அரங்கேற்றிய படுபாதகச் செயல். இதன் நோக்கம் என்ன? இந்துத்துவா மதவெறி கொள்கைகளை எதிர்க்கும் இந்து மதத்தினரை பகிரங்கமாக கொடூர முறையில் கொல்வது.

இதன் மூலம் எதிர்க்கருத்தை முன் வைப்பவர் களை மிரட்டி வாய்மூடச் செய்வது. இதுவே சங்பரிவாரத்தின் நோக்கம் ஆகும். அதன்படி கொலை செய்யப்பட வேண்டியவர்களின் நீண்ட பட்டியலும் தயாரிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் சங்பரிவாரத்தின் மேல்மட்ட தலைவர்கள் உதவி இல்லாமல் எப்படி சாத்தியம்? இந்தக் கொலைகளை வெளியில் பரவலாக தெரியாத அமைப்புகள் மூலம் அரங்கேற்றுவது ஒரு திட்டமிட்ட வஞ்சக அணுகுமுறை ஆகும். கொலையாளிகள் அடை யாளம் காணப்பட்டாலும் முக்கிய அமைப்புகள் தப்பித்துக் கொள்ளலாம். இந்த கொலையில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டவர்கள் 27 முதல் 39 வயது வரை உள்ளவர்கள்தான்! தொழில்முறை கொலையாளிகள் போல நுணுக்கமாகவும் துல்லியமாகவும் இந்த கொலை நடத்தப்பட்டுள்ளது. மதவெறியும் கொலைத் திறமையும் ஒன்றிணைந்தால் என்ன நடக்கும் என்பதை இத்தகைய கொலைகள் வெளிப்படுத்துகின்றன.கவுரி லங்கேஷ் படு கொலையை துப்பு துலக்கிய புலனாய்வுக் குழு பாராட்டுதலுக்குரியது. அதே சமயம் கர்நாடகத்தில் பா.ஜ.க. ஆட்சி இருந்திருந்தால் இந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்காது என்பதை கூறத் தேவை இல்லை.

மகாராஷ்டிராவில் சுட்டுக் கொல்லப்பட்ட இடதுசாரி சிந்தனையாளர் பன்சாரே, கல்புர்கி, கொலையையும் இதே கும்பல்தான் செய்தது என்று கருநாடக காவல்துறை பிடிபட்ட குற்றவாளிகளின் வாக்குமூலத்திலிருந்து உறுதி செய்துள்ளது.

## பார்ப்பன அதிகார வர்க்கத்தின் வங்கி மோசடிகளுக்கு எல்.அய்.சி.யை பலிகடாவாக்கும் மோடி ஆட்சி

பார்ப்பன அதிகாரிகள் நிர்வாக ஒழுங்கீனம் - ஊழல்களால் நலிவடையும் பொதுத் துறை வங்கிகளைக் காப்பாற்ற ஏழை எளிய மக்கள் முதலீடு செய்யும் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தை (எல்.அய்.சி.) குலைக்கும் முயற்சிகளில் நடுவண் ஆட்சி இறங்கியுள்ளது.

நாட்டின் நிதி நிலைமை மோசமாகும்போதும், பங்குச்சந்தை பாதிப்பு அடையும் போதும், எல்ஐசி நிறுவனத்தின் அதீதமுதலீடு மூலம், அந்த பாதிப்பு சரிக்கட்டப்பட்டு வருகிறது. இது நீண்டகாலமாக நடந்து வருகிறது. ஆனால், மோடிஆட்சியில் இது அதிகமாகி இருக்கிறது.அந்த வகையில், தற்போது குடைசாய்ந்து நிற்கும் ஐடிபிஐ வங்கியின் 43 சதவிகித பங்குகளையும், பொதுத் துறை ஆயுள் காப்பீட்டு நிறுவனமான எல்ஐசியிடம் தள்ளிவிடும் முயற்சியில் மோடி அரசு ஈடுபட்டுள்ளது. அதாவது, எல்ஐசியிடம் இருந்து ரூ. 13 ஆயிரம் கோடியை பிடுங்கி, ஐடிபிஐ வங்கிக்கு அளிக்க முடிவு செய்துள்ளது. இது தற்போது கடும் எதிர்ப்புக்கு உள்ளாகி இருக்கிறது.

சாமானியர்கள், தங்களின் குடும்பத் தைக் காப்பாற்ற மாதந்தோறும் நூறும், ஆயிரமுமாய் எல்ஐசி-யின் காப்பீட்டுத் திட்டங்களில் சேமித்து வருகின்றனர். பெரிய முதலீட்டாளர்கள், முதலீட்டு நிறுவனங்களும் எல்ஐசியிடம் காப்பீடுபெற்றுள்ளன. இவர்கள் அனைவருமே எல்ஐசி, தனது முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும் என தற்போது கோரிக்கை விடுக்கத் துவங்கியுள்ளனர்.

ஏனெனில், ஐடிபிஐ வங்கியானது கடந்த நிதியாண்டின் மார்ச் காலாண்டில், 3 ஆயிரத்து 199 கோடியே 77 லட்சம் இழப்பைச் சந்தித்து இருந்தது. அது நடப்பாண்டில் சுமார் 5 ஆயிரத்து 662 கோடியே76 லட்சம் அளவிற்கு இழப்பைச் சந்தித்த வங்கியாகும். அதேபோல ஐடிபிஐ வங்கியின் வராக்கடன் மதிப்பு கடந்த நிதியாண்டில் 44 ஆயிரத்து 753 கோடியாக இருந்தது. இது தற்போது 55 ஆயிரத்து 588 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.மேலும், கடந்த ஓராண்டில் ஐடிபிஐ வங்கியின் மொத்த வருமானமும் 44 சதவிகிதம் சரிந்து, ஆயிரத்து 633 கோடியே29 லட்சத்திலிருந்து, வெறும் 915 கோடியே 47 லட்சம் ரூபாயாகக் குறைந்துள்ளது. இந்நிலையில், சாமானியர்களின் முதலீட்டால் மட்டுமே இயங்கும் எல்ஐசி,அதிக நஷ்டத்தில் இருக்கும் நிறுவனத்தில் முதலீடு செய்வது, எல்ஐசியிடம் காப்பீடு பெற்றுள்ள மக்களுக்கும்,அவர்களுக்கு உறுதி அளிக்கப்பட்ட தொகைக்கும் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதே மக்களின் எதிர்ப்புக்குக் காரணம்.

மோடி ஆட்சிக்கு வந்த பின்பு, கடந்த இரண்டரை ஆண்டுகளில் மொத்தம் 21 பொதுத்துறை நிறுவனங்களில் மிகப் பெரிய தொகையை எல்ஐசி முதலீடு செய்துள்ளது. ஆனால், அவற்றில் 18 நிறுவனங்கள் இழப்பை மட்டுமே எல்ஐசிக்கு அளித்துள்ளன.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# நாமக்கல் தொடர்வண்டி மறியலில் கழகம் பங்கேற்பு



வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை செயலிழக்கச் செய்யும் தீர்ப்பைக் கண்டித்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒருங்கிணைத்து, ஜூலை 2 ஆம் தேதி திங்கள் கிழமை நடத்திய ரயில் மறியல் போராட்டம், நாமக்கல் ரயில் நிலையத்தில் மதியம் 12 மணிக்கு மேல் நடைபெற்றது. இதில், திராவிடர் விடுதலைக் கழக நாமக்கல் மாவட்டத் தலைவர் சாமிநாதன், மாவட்ட பொருளாளர் முத்துப்பாண்டி, பள்ளிபாளையம் நகர தலைவர் பிரகாசு, பள்ளாளையம் நகர அமைப்பாளர் தியாகு மற்றும் பள்ளிபாளையம், திருச்செங்கோடு பகுதியைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

## கோலாலம்பூரில் பகுத்தறிவு கருத்தரங்கு



மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் அமைந்துள்ள பெரியார் அரங்கில் 8.7.2018 ஞாயிறு மாலை மூன்று மணி அளவில் 'பகுத்தலும்-புகுத்தலும்' என்ற தலைப்பில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான கட்டணமில்லா கருத்தரங்கம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் வரவேற்புரை வழங்கினார், நெறியாளர் சி.மு.விந்தைக்குமரன். எப்.காந்தராஜ் (மலேசியத் திராவிடர் கழகத் தேசியத் தலைவர்) தொடக்க உரை நிகழ்த்தினார். கெ.வாசு (துணை தலைவர், மலேசியத் தமிழர் தன்மான இயக்கம்) தலைமையேற்றார். மரு.கிருட்டிணன், பாரி சுந்தரம், செம்பியன், பட்டுக்கோட்டை கவிமணி ஆகியோர் கருத்துரை நிகழ்த்தினார்கள். மு.முகிலன் நன்றி உரை நிகழ்த்தினார். இதுபோன்ற கருத்தரங்கம் நாடளாவிய அளவில் தொடர்ச்சியாக நடத்தப்படும் என்று தொகுப்புரை வழங்கிய, மலேசியத் தமிழர் தன்மான இயக்கத்தின் தேசியத் தலைவர் பெரு. அ. தமிழ்மணி கூறினார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வேலை செய்துகொண்டே அவர் நீட் தேர்வுக்குத் தயாராவார்.

டி.எம், எம்.சிஹெச் போன்ற உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகளில் தமிழகத்தில் 192 இடங்கள் உள்ளன. முன்பு இந்த இடங்கள் தமிழக அரசு நடத்தும் நுழைவுத்தேர்வு மூலம் நிரப்பப்பட்டன. இதிலும் 50 சதவிகித இடங்கள் அரசு மருத்துவர்களுக்கு ஒதுக்கப்படும். பிற 50 சதவிகித இடங்கள் 'ஓபன் கோட்டா' மூலம் நிரப்பப்படும். இதனால், சிறுநீரக சிகிச்சை, மூளை சிகிச்சை, இதய சிகிச்சை என சிறப்பு மருத்துவ நிபுணர்கள் நிறையபேர் அரசு மருத்துவமனைகளுக்கு வந்தார்கள். தஞ்சாவூர் போன்ற ஒரு நகரத்தில் இருக்கிற மருத்துவக் கல்லூரியில், இன்று ரத்தக்குழாய் அறுவை சிகிச்சை போல நுட்பமான சிகிச்சைகள் எல்லாம் செய்ய முடிகிறதென்றால் அதற்குக் காரணம், இந்த வாய்ப்புதான். இந்த உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகளில் அரசு மருத்துவர்களுக்கான ஒதுக்கீட்டை நீக்கி விட்டார்கள். நீட் மூலமாகவே இந்த இடங்களும் நிரப்பப்படும்.

'தமிழ்நாடு முழுவதும் டயாலிசிஸ் மையங்கள் திறக்க வேண்டும், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மையங்கள் திறக்க வேண்டும்' என்றெல்லாம் தமிழக அரசு கொள்கை முடிவு எடுக்கிறது. ஆனால், தமிழகத்தில் இருக்கிற உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகள் வெளி மாநிலத்தவர்களுக்குப் போகிறது. இதனால், அடுத்த 15 வருடத்தில் கடும் மருத்துவர் பற்றாக்குறை ஏற்படும். சுகாதாரக் கட்டமைப்பு சரிந்துபோகும்'' என்று எச்சரிக்கிறார் சென்னை மருத்துவக் கல்லூரி ரத்தக்குழாய் அறுவைச் சிகிச்சைத்துறை முன்னாள் இயக்குனர் டாக்டர் அமலோற்பவநாதன்.

**தமிழகத்தில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் படித்த 51 சதவீதம் மருத்துவர்கள், தமிழக சுகாதாரத்துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்கிறது ஹைதரபாத் ஜவர்கஹால் நேரு பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஓர் ஆய்வு. நுழைவுத்தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்று எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படித்த 51 சதவீத மாணவர்கள் இந்தியாவில் இல்லை.** வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள் என்றும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது. அனிதா போல, பிரதிபா போல அடித்தட்டுக் குடும்பத்தில் பிறந்து வருபவர்கள்தான் தங்கள் மக்களுக்காக சிந்திப்பார்கள். அவர்களைப் போன்றவர்களால் தான் தமிழகம் சுகாதாரத்துறையில் முன்னிலையில் இருக்கிறது. அவர்களுக்கான வாய்ப்புகள் பறிக்கப்படும்போது தேசத்தின் மருத்துவக் கட்டமைப்பு பாதிக்கப்படும் என்ற அச்சத்தில் நியாயமிருக்கிறது.

இந்திய மருத்துவக் கவுன்சிலின் எதிர்ப்பால் இந்த தேசிய மருத்துவ ஆணைய மசோதா நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டது. தற்போது நிலைக்குழு அறிக்கையை சமர்ப்பித்துவிட்டது. மத்திய அமைச்சரவையும் ஒப்புதல் வழங்கிவிட்டது. இந்த மசோதாவை எதிர்க்காவிட்டால், நீட் தேர்வு நிரந்தரமாகிவிடும் என்கிறார்கள்.

**– நமது செய்தியாளர்**

# உருவாகாத 'ரிலையன்சு' கல்வி நிறுவனத்துக்கு சிறப்பு தகுதியாம்

*உருவாகாத ரிலையன்ஸ் கல்வி நிறுவனத்துக்கு, 'புகழ்பெற்ற கல்வி நிறுவனத்துக்கான' தகுதியாம்.*

இந்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தால் இந்தியாவிலுள்ள ஆறு உயர்கல்வி நிறுவனங்கள், உலக கல்வி தரத்துக்கு இணையான இந்தியாவின் 'புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களாக (Institutions of Eminence)' அறிவிக்கப்பட்டன. இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் (டெல்லி, மும்பை), இந்திய அறிவியல் கழகம் (பெங்களூர்), பிலானியிலுள்ள பிர்லா தொழில்நுட்பக் கழகம் (1964), மணிபால் உயர்கல்வி அகாடமி (1953) என குறைந்தபட்சம் ஐம்பது ஆண்டு கால உயர்கல்வி பயிற்சி அனுபவமுடைய கல்வி நிறுவனங்களோடு, இன்னும் உருவாக்கப்படாத ரிலையன்ஸ் ஜியோ கல்வி நிறுவனத்துக்கும் புகழ்பெற்ற கல்வி நிறுவன அந்தஸ்தை இணைத்து வழங்கியிருக்கிறது இந்திய அரசு.

கடந்த 2016ம் ஆண்டைய பட்ஜெட் கூட்டத் தொடரில் இந்தத் திட்டம் பற்றிய அறிவிப்பை செய்த நிதியமைச்சர் அருண் ஜெட்லி பத்து அரசு கல்வி நிறுவங்கள், பத்து தனியார் கல்வி நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளுக்கு 'புகழ்பெற்ற கல்வி நிறுவன'த் தகுதி வழங்கப்படும் என அறிவித்தார்.

கல்வி நிறுவங்களை தேர்ந்தெடுப்பதற்கான குழு அமைக்கப்பட்டு, அக்குழு இந்தியா முழுதிலிருந்தும் விண்ணப்பித்திருந்த பல்வேறு கல்வி நிறுவங்களை பரிசீலித்து, வெறும் ஆறு கல்வி நிறுவனங்களை மட்டுமே அதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்திருக்கிறது. 20 கல்வி நிறுவனங்கள் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழலில் வெறும் ஆறு நிறுவங்களை தேர்ந்தெடுத்தது பற்றி குழுவின் தலைவரிடம் கேட்டதற்கு, "விண்ணப்பித்திருந்த பல்வேறு கல்வி நிறுவனங்களை ஆய்வு செய்ததில் உலகின் முதல் 500 கல்வி நிறுவனங்களுடன் போட்டி போடு வகையில் உலக தரத்தை ஒத்த 20 கல்வி நிறுவனங்கள் கூட இந்தியாவில் இல்லை. பெரும்பாலானவை உலக கல்வித் தர ரீதியில் பின் தங்கியுள்ளன'' என தெரிவித்தார்.

தற்போது இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய, அண்ணா பல்கலைக் கழக அனுபவத்தையொத்த பல கல்வி நிறுவனங்களுக்கு 'உலகத்தர கல்வி அனுபவமில்லை' என 'தகுதி' வழங்க மறுத்தவர்கள்தான், இன்னும் உருவாக்கவேபடாத ரிலையன்ஸ் ஜியோ கல்வி நிறுவனத்துக்கு அந்தத் தகுதியைத் தந்திருக்கிறார்கள்.

இத்தகைய அங்கீகாரம் பெறக் கூடிய கல்வி நிறுவனங்களுக்கு அரசு தரப்பில் பத்தாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கித் தரப்படும். மேலும் இக்கல்வி நிறுவனங்கள் பல்கலைக் கழக அமைப்புக் குழு, இந்திய பார் கவுன்சில், இந்திய மருத்துவ கவுன்சில் போன்ற இந்திய கல்வி ஒழுங்காற்று அமைப்புகளின் கட்டுப்பாடுகளுக்கு உட்படத் தேவையில்லாத தன்னாட்சி அதிகாரமுடைய கல்வி நிறுவனங்களாக மாற்றப்படும்.

கல்விக் கட்டண நிர்ணயிப்பு, இட ஒதுக்கீடு, கல்வி உதவித் தொகை போன்ற, மக்கள் நல அடிப்படையில் நடைமுறையில் இருக்கக்கூடிய கட்டுப்பாடுகள் ஏதும் இத்தகைய கல்வி நிறுவனங்களுக்கு பொருந்தாது.

அனில் அம்பானியின் ரிலையன்ஸ் தகவல் தொடர்பு நிறுவனத்துக்கு இழப்பு என்றால், அவர்களுக்கு முன் அனுபவமே இல்லாத (கூடங்குள) அணுஉலை பராமரிப்பு ஒப்பந்தம் வழங்கப்பட்டு லாபம் ஈட்ட இந்திய அரசு வழிவகை செய்து கொடுக்கும். இந்தியாவில் தனியாருக்கான சர்வதேச கல்வி சந்தை உருவாகிறதா, கல்வி நிறுவனத்தையே தொடங்காத ரிலையன்ஸ் ஜியோவிற்கு Institution of Eminence அந்தஸ்தைக் கொடுத்து, கல்வியிலும் லாபம் சம்பாதிக்க வழியேற்படுத்திக் கொடுக்கும். இதுதான் மோடி ஆட்சி.

## அமெரிக்காவில் தேசியக் கொடியை எரிப்பது குற்றமல்ல!

1989 - அமெரிக்க தேசியக் கொடியை, எரிப்பது முதலான அவமரியாதை செய்யும் நடவடிக்கைகளைக் குற்றமாகக் கருதமுடியாது என்று அமெரிக்க உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. 1984இல்டெக்சாஸ் மாநிலத்தில் நடைபெற்ற ஒருபோராட்டத்தில் அமெரிக்க தேசியக்கொடி எரிக்கப்பட்டது. போராட்டத்தில் யாருக்கும்காயம்கூட ஏற்படாவிட்டாலும், தேசியக்கொடியை அவமரியாதை செய்ததற்காக, எரித்தவருக்கு இரண்டாயிரம் டாலர் அபராதமும், ஓராண்டு சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டன. இதை எதிர்த்தஅவரது மேல்முறையீடுகளின் தொடர்ச்சியாகவே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. அமெரிக்க அரசியல் சட்டத்தின் முதல் திருத்தம் குடிமக்களுக்கு வழங்கியுள்ள, (ஒருங்கிணைதல், அரசுக்கு எதிராகப் போராடுதல் முதலானவற்றுக்கான) பேச்சுரிமைக்கு எதிரானது இத் தண்டனை என்று கூறிய இத்தீர்ப்பு, கொடி தொடர்பாக 50இல் 48 மாநிலங்களில் அப்போது இருந்த சட்டங்களைச் செல்லாததாக்கியது. இதைத் தொடர்ந்து, அவ்வாண்டிலேயே கொடி பாதுகாப்புச் சட்டம் என்பது இயற்றப்பட்டது. ஆனால், அடுத்த ஆண்டிலேயே அதையும் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதன்பின் இதுதொடர்பாகக் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் அனைத்தும் தோற்றுப்போயின. கொடிஎரிப்பு என்ற சொற்றொடரே, அரசுக்கெதிரான போராட்டத்தைக்குறிப்பதாக உலகம் முழுவதும் இருந்தாலும், அமெரிக்காவின் தேசியக் கொடி பழையதாகிவிட்டால், அதை மரியாதையுடன் அழிப்பதற்கான முறையாக, எரிப்பதையே அந்நாட்டு கொடிச் சட்டம் குறிப்பிடுகிறது. அதைப் போலவே, கொடியைத் தலைகீழாகப் பறக்கவிடுவதையும் அந்நாடு குற்றமாகப் பார்க்கவில்லை. மிகப்பெரும் வருத்தம், ஆபத்து ஆகியவற்றை வெளிப்படுத்தும் அடையாளமாக, அமெரிக்கக் கொடியைத் தலைகீழாகப் பறக்கவிடலாம்! இதே அமெரிக்காவில், உள்நாட்டுப் போர் நடைபெற்றபோது, தேசியக் கொடியை அகற்றிய குற்றத்திற்காக, 1862இல் ஒருவர் தூக்கிலிடப்பட்டார் என்பது நினைவுகூரத்தக்கது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 13th July 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN